

திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பென்னாத்தூர் வடக்கு ஒன்றியத்திற்குட்பட்ட கொளத்தூர் ஊராட்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த வேலுச்சாமி தலைமையில் 50க்கு மேற்பட்டோர் அக் கட்சியில் இருந்து விலகி தமிழ்நாடு சட்டபேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி , ஒன்றிய கழக செயலாளர் ஆராஞ்சி ஆறுமுகம் ஆகியோர் முன்னிலையில் தங்களை தி.மு.க.வில் இணைத்துக் கொண்டனர். இந்நிகழ்ச்சியில் இரா.ராஜேந்திரன், மா.குப்புசாமி, அண்ணாமலை, மு.பழனி, வெங்கடேசன், ஏர்பாக்கம் செல்வம், கிளை கழக செயலாளர்கள் மோகன், ஆறுமுகம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### முத்தமிழறிஞர் கலைஞர் வழிவந்த 'திராவிட மாடல்' அரசு!

# கலைஞர்களைப் போற்றி - மற்றொரு மணிமகுடமாய் விருதுகள் வழங்கி பெருமைப்படுத்தி வருகிறது!

## "தினகரன்" நாளேடு புகழாரம்!

சென்னை, செப். 26 –

முத்தமிழறிஞர் கலைஞர் வழி வந்த 'திராவிட மாடல்' அரசானது, கலைஞர்களைப் போற்றும் அரசாகவும் அவர்களின் புகழுக்கு மற்றொரு மணி மகுடமாய் விருதுகள் வழங்கியும் பெருமைப்படுத்தி வருகிறது என ' 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் புகழாரம் சூட்டியுள்ளது.

அது வருமாறு:



தினகரன்
செப்டம்பர் 25, 2025 வியாழக்கிழமை
கலைஞர்களுக்கு கவுரவம்
2021, 2022 மற்றும் 2023ம் ஆண்டுகளுக்கான கலைமாமணி உள்ளிட்ட விருதுகளை பெறும் 90 கலைஞர்களின் பெயர்கள் நேற்று அறிவிக்கப்பட்டுள்ளன. இயல், இசை, நாடகம் என்ற அடிப்படையில், நாடகம், திரைப்படம், சின்னத்திரை உட்பட பல்வேறு கலைப்பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு கலைமாமணி, இதைத்தவிர இம்மூன்று துறைகளில் சாதனையாளர்களாக திகழ்ந்த மகாகவி பாரதியார், எம்.எஸ்.சுப்புலட்சுமி, பாலசரசுவதி ஆகியோரின் பெயரிலும் அகில இந்திய விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. தேர்வானவர்களுக்கு தமிழக மக்கள் மற்றும் கலைத்துறை பிரபலங்கள் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர். தேர்வான கலைஞர்களும் தமிழக அரசுக்கு வாழ்த்துகளை தெரிவித்தவண்ணம் உள்ளனர். கலைமாமணி விருது பெறுபவர்

2021, 2022 மற்றும் 2023ம் ஆண்டுகளுக்கான கலைமாமணி உள்ளிட்ட விருதுகளை பெறும் 90 கலைஞர்களின் பெயர்கள் நேற்று அறிவிக்கப்பட்டுள்ளன. இயல், இசை, நாடகம் என்ற அடிப்படையில், நாடகம், திரைப்படம், சின்னத்திரை உட்பட பல்வேறு கலைப்பிரிவு களைச் சேர்ந்தவர்களுக்கு கலைமாமணி, இதைத்தவிர இம்மூன்று துறைகளில் சாதனையாளர்களாக திகழ்ந்த மகாகவி பாரதியார், எம்.எஸ்.சுப்புலட்சுமி, பாலசரசுவதி ஆகியோரின் பெயரிலும் அகில இந்திய விருதுகள் அறிவிக்கப்பட் டுள்ளன.

தேர்வானவர்களுக்கு தமிழக மக்கள் மற்றும் கலைத்துறை பிரபலங்கள் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர். தேர்வான கலைஞர்களும் தமிழக அரசுக்கு வாழ்த்துகளை தெரிவித்தவண்ணம் உள்ளனர். கலைமாமணி விருது பெறுபவர்களுக்கு 3 சவரன் தங்கப் பதக்கம் மற்றும் விருது வழங்கப்படும். அகில இந்திய விருது பெறுபவர்களுக்கு ரூ.1 லட்சத்துக்கான செக், 3 சவரன் தங்கம் வழங்கப்படும்.

மகாகவி பாரதியார் விருதுக்கு பிரபல எழுத்தாளர், கவிஞர், நூலாசிரியர் என பன்முறை திறன் கொண்ட மதுரையைச் சேர்ந்த ந. முருகேச பாண்டியன் தேர்வாகியுள்ளார். மலையாளம், தமிழ் உட்பட பன்மொழி திரையிசையில் மட்டுமல்ல... கர்நாடக சங்கீதத்திலும் கொடி கட்டி பறந்த கே.ஜே.யேசுதாஸ்க்கு எம்.எஸ்.சுப்பு லட்சுமி விருது வழங்கப்பட உள்ளது. பிரபல நடன கலைஞரான முத்து க் கண்ணம்மாள், பாலசரசுவதி விருதுக்கு தேர்வாகியுள்ளார்.

2021ம் ஆண்டுக்கான கலைமாமணி விருதுக்கான பட்டியலில் எழுத்துலகில் பிரபலமான க. திருநா வுக்கரசு, சிறந்த கவிதைகளை படைத்து வரும் கவிஞர் நெல்லை ஜெயந்தா, பூச்சி எஸ். முருகன், திரை இயக்குனர்கள் காரைக்குடி நாராயணன், எஸ். ஜே.சூர்யா, லிங்கு சாமி, நடிகை சாய் பல்லவி, கிராமப்புற பாடகரான வீரசங்கர் உள்ளிட்ட 30 பேர் தேர்வாகியுள்ளனர்.

2022ம் ஆண்டுக்கான கலைமாமணி விருதுக்கான பட்டியலில் எழுத்தாளரான சாந்தகுமாரி சிவகடாட்சம், இலக்கிய பேச்சாளரான தி.மு.அப்துல் காதர், மிருதங்க வித்வான் நெய்வேலி ஆர்.நாராயணன், நாடக நடிகர் பொன் சுந்தரேசன், சிவாஜியின் பேரனும், நடிகர் பிரபுவின் மகனுமான நடிகர் விக்ரம் பிரபு, பிரபல திரைப்பட செய்தி தொடர்பாளரான டைமண்ட் பாபு உள்ளிட் டோர் தேர்வாகியுள்ளனர்.

2023ம் ஆண்டுக்கான கலைமாமணி விருதுக்கான பட்டியலில், கவிஞர் ஜீவபாரதி, பழம்பெரும் நடிகர் ஜோதி கண்ணன், மிமிக்ரி புகழ் நடிகர் மணிகண்டன், குணச்சித்திர நடிகர் ஜார்ஜ் மரியான், பிரபல இசையமைப்பாளரான அனிருத், பின்னணி பாடகி ஸ்வேதா மோகன், சிற்பி தீனதயா ளன் உள்ளிட்டோர் தேர்வாகியுள்ளனர். விருதுக்கு தேர்வான அனைவருக்கும் அடுத்த மாதம் சென்னை கலைவாணர் அரங்கில் முதல்வர் மு.க. ஸ்டாலின் விருதுகளை வழங்கி கவுரவிக்க உள்ளார்.

கல்வியை மட்டுமல்ல... கலைத்துறையையும் உரிய முறையில் திராவிட மாடல் அரசு சிறப்பித்து வருகிறது. கடந்த செப். 13ம் தேதி திரையிசையில் 50 ஆண்டுகளை கடந்ததற்காகவும், சிம்பொனி இசைக்காகவும் இசைஞானி இளையராஜாவுக்கு தமிழக அரசு சார்பில் பிரமாண்ட பாராட்டு விழா நடத்தப்பட்டது. அது மட்டுமல்ல...

இயல், இசை, நாடகத்துறையில் நலிவடைந்த கலைஞர்களை கண்டறிந்து, அவர்களது வாழ்வாதாரத்தை காக்கும் வகையில் நலத்திட்ட உதவிகளும் ஆண்டு தோறும் வழங்கப்பட்டு வருகிறது. இதற்காக நலவாரியம் அமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. கலைஞர் வழி வந்த திராவிட மாடல் அரசானது, கலைஞர்களை போற்றும் அரசாகவும் விளங்கி வருகிறது. அவர்களின் புகழுக்கு மற்றொரு மணி மகுடமாய் விருதுகள் வழங்கியும் பெருமைப்படுத்தி வருகிறது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### சென்னை வர்த்தக மையத்தில் ஆதிதிராவிடர் – பழங்குடியின

# இளைஞர்களுக்கான ஆதி கலைக்கோல் பயிற்சிப் பட்டறை நிறைவு நாள்!

## அமைச்சர் – மருத்துவர் மா.மதிவேந்தன் நிறைவுரையாற்றினார்!

சென்னை, செப்.26–

சென்னை வர்த்தக மையத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கான ஆதிகலைக் கோல் பயிற்சிப் பட்டறையை தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 22.9.2025 அன்று தொடங்கி வைத்து விழா பேருரையாற்றினார்கள்.

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மற்றும் தாட்கோ தலைவர் நா.இளையராஜா கலந்து கொண்ட தொடக்க விழா நிகழ்ச்சிகள் மூன்று நாட்கள் சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்றது.

நேற்று முன்தினம் (24.09.2025) நிறைவு நாள் விழாவில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மா.மதிவேந்தன் தெரிவித்ததாவது:

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பாக தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக்கழகம் (தாட்கோ) நடத்திய இளைஞர்களுக்கான மூன்று நாட்கள் ஆதிகலைக்கோல் பயிற்சி பட்டறையில் கலந்து கொண்டு பயிற்சி பெற்ற இளைஞர்களுக்கு வாழ்த்துகளையும் நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மூலமாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் மேம்பாட்டிற்காக பல்வேறு நலத்திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது.

இதனைத் தொடர்ந்து பழமையான கலைகளையும் அதன் பரிணாம வளர்ச்சியையும் மாணவர்களுக்கு கற்றுத் தரும் ஒரு நிகழ்வாக வடிவமைக்கப்பட்டு நாட்டுப்புறக் கலை, நாடகக் கலை, இலக்கிய கலை மற்றும் காட்சி கலை ஆகிய நான்கு கலைகளில் சிறந்து விளங்கும் வல்லுநர்களை கொண்டு மூன்று நாட்கள் பயிற்சி பயிலரங்கம் இம்மையத்தில் நடைபெற்றது. இக்கலைகளின் வழியாக மனித எண்ணங்களின் சிந்தனைகளை இணைக்கும் ஒரு பாலமாகவும், கற்பனையை மேன்மைபடுத்தும் கலைகளை நான்கு பிரிவுகளாக பிரித்து இளைஞர்களுக்கு வழிநடத்தும் நோக்கில் இக்கலைகளில் சிறந்து விளங்கும் வல்லுநர்களைக் கொண்டு பயிற்சிகள் வழங்கப்பட்டது.

இக்கலைகள் மண்ணுக்கும் மக்களுக்குமான ஆழமான உறவை, பாரம்பரிய இசைக்கருவிகளின் துடிப்போடு இசைத்து, நடனம் ஆடி மரபின் உயிரோட்டத்தை இளைஞர்களின் உள்ளங்களில் விதைத்து, கலாச்சாரத்தின் வேர்களைப் புதுப்பிக்கும் நாட்டுப்புறக்கலை களையும், வாழ்க்கை கதைகளையும் சமூக உண்மைகளையும் மேடையேற்றி, சிந்தனைகளையும் உணர்வுகளையும் அனைவருக்கும் கொண்டு சேர்த்து புதிய பாதை அமைத்துக்கொள்ள வழிவகை செய்யும் நாடக கலைகளையும் மற்றும் இலக்கியத்தின் வழியே மனிதர் கண்ட வளர்ச்சியை, மொழியும், கவிதையும் எடுத்துரைத்தன அத்தொன்மையை இந்தக் கலைகள் வழிநடத்தும், இலக்கிய கலைகளையும், வண்ணங்களும் வடிவங்களும் இணைந்து மனித எண்ணங்களின் சிந்தனைகளை இணைக்கும் ஒரு பாலமாகவும், கற்பனையை மேன்மைபடுத்தும் கலைகளை நான்கு பிரிவுகளாக பிரித்து 300 இளைஞர்களுக்கு இப்பயிற்சி பட்டறையில் பயிற்சிகள் வழங்கப்பட்டது.

ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களின் இன்றைய அறிவிப்பின்படி முதற்கட்டமாக ஒவ்வொரு கலைகளிலும் சிறந்து விளங்கிய ஒரு நபரை தேர்வு செய்து நான்கு நபர்களுக்கு தலா ரூ 20000/– (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) க்கான காசோலை வழங்கப்பட்டது.

### தி.மு.கழகத்தின் சார்பில்

# ஊடக விவாதங்களில் கலந்து கொள்வோர்!

## தலைமைக் கழக அறிவிப்பு

தி.மு.கழகத்தின் சார்பில் ஊடக விவாதங்களில் கலந்து கொள்வோருடன் கீழே குறிப்பிட்டுள்ள பேச்சாளர்களும் இணைந்து பங்கு பெறுவர்.

1. திரு. ப. தாயகம் கவி
2. திரு. மருது அழகுராஜ்
3. திரு. பழ. செல்வகுமார்
4. திரு. திருப்பத்தூர் ரஜினி
5. திரு. சைதை சாதிக்
6. வழக்கறிஞர் துரை தமிழ்ச்செல்வன்

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை – 18.
நாள்: 25.09.2025

**தலைமைக் கழகம்**
தி.மு.க.




விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் அனையேரி, வரிக்கல் ஊராட்சியில் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாமை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார். முகாமில் புதுமணத் தம்பதியினர் இலவச வீட்டு மனை பட்டா வேண்டி கோரிக்கை மனு வழங்கினர். உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், வட்டார வளர்ச்சி அலுவலர் நடராஜன், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, ஊராட்சி மன்றத் தலைவர்கள் ரவி, சீனுவாசன் உள்ளனர்.



நெல்லை மாவட்டம் மானூர் வட்டம் தேவர்குளம் அடைக்கலாபுரம் விளக்கு வீரபாண்டியன் மஹாலில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் பட்டாக்கள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு பங்கேற்று மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார்,நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல்வஹாப் எம்.எல்.ஏ. தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ.ஆகியோர் முன்னிலையில் வழங்கினார். நிகழ்வில் திட்ட இயக்குனர் சரவணன், மாவட்ட வருவாய் அலுவலர் சுகன்யா, மாவட்ட ஊராட்சி மன்ற துணைத் தலைவர் செல்வலட்சுமி அமிதாப் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### 'தலைகுனிய விடமாட்டேன்' எனும் பிரச்சாரம்

# மோடி அரசுக்கு கிலியை ஏற்படுத்தியுள்ளது!

## "நக்கீரன்" விமர்சனம்!

சென்னை, செப்.26–

தேர்தல் பணிகளில் தொடர்ச்சியாக வேகம்காட்டி வருகிறார் முதலமைச்சரும் தி.மு.க. தலைவருமான மு.க.ஸ்டாலின். ஒரு நாளைக்கு 18 முதல் 20 மணி நேரம் ஆட்சிப் பணி மற்றும் தேர்தல் பணிகள் குறித்தே அவரது விவாதங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. இந்த சூழலில், 'தமிழகத்தை தலைகுனிய விடமாட்டேன்' எனும் சூளுரையை, மத்திய பா.ஜ.க. அரசுக்கு எதிரான மக்கள் மூவ்மெண்ட்டாக மாற்றும் அடுத்த கட்டத்தை நோக்கி நகர்த்திவருகிறார் ஸ்டாலின்.

அண்மையில், தி.மு.சு. மா.செ.க்கள் கூட்டத்தில் பேசிய அவர், "தேர்தல்னு வந்துட்டா தி.மு.சு.காரனை அடிச்சிக்க ஆளே கிடையாது" என்று பெருமிதமாகச் சொன்னார். அந்த பெருமிதம்

அவரிடமிருந்து 1 சதவீதம் கூட குறைந்து விடாதபடிக்கு மா.செ.க்கள் களத்தில் செயலாற்றி வருகின்றனர்.

தேர்தல் பணிகளில் முக்கியமானதாக, ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் 30 சதவீதம் வாக்காளர்களை தி.மு.க.வின் உறுப்பினர்களாக்கும் திட்டத்திற்கு மதுரையில் நடந்த மாநாட்டில் அடித்தளம் போடப்பட்டது. அதன்படி, 'ஓரணியில் தமிழ்நாடு' என்ற புதிய உறுப்பினர்கள் சேர்க்கை தமிழகம் முழுவதும் தொடங்கப் பட்டது. தமிழகத்திலுள்ள 68,000 வாக்குச் சாவடிகளிலும் உறுப்பினர் சேர்க்கையை தி.மு.க. உடன்பிறப்புகள் தீவிரப்படுத்தினர்.

குறிப்பாக, மத்திய பா.ஜ.க. அரசின் தமிழகத்துக்கு விரோதமான நடவடிக்கை களைச் சுட்டிக்காட்டி 'தமிழகத்தின் மண்,மொழி, மானம் காக்க ஓரணியில் தமிழ்நாடு இயக்கத்தில் இணையுங்கள்' என்று பரப்பப்பட்ட பிரச்சாரம், மக்களிடம் தாக்கத்தை ஏற்படுத்தி யிருந்தது. அப்போது ஏற்பட்ட சட்ட நெருக்கடிகளையும், பல பிரச்சினைகளையும் எதிர்கொண்டு பணியாற்றியதில் 1 கோடி குடும்பங்களைச் சேர்ந்த 2 கோடி உறுப்பினர்கள் தி.மு.க.வில் இணைந்தனர்.

இதன் தொடர்ச்சியாக, அண்ணா பிறந்தநாளில் (செப்15), ஓரணியில் தமிழ்நாடு இயக்கத்தில் இணைந்த 1 கோடி குடும்பங்களை இணைத்து, 68,000 வாக்குச்சாவடிகளிலும், தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன் எனும் குளுரை உறுதியேற்பு கூட்டங்களை நடத்தியது தி.மு.க. சென்னையில் அறிவாலயத்தில் இந்த உறுதியேற்பை தொடங்கி வைத்தார் ஸ்டாலின்.

அப்போது, தமிழ்நாட்டின் நாடாளுமன்றத் தொகுதிகளின் விகிதாச்சாரத்தை குறைக்கும் நியாயமற்ற தொகுதி மறுவரையறைக்கு எதிராகப் போராடுவேன்; 'தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன்' என்றும், வாக்காளர் பட்டியல் திருந்த மோசடி மூலம் தமிழ்நாட்டு மக்களின் வாக்குரிமையை பறிக்கும் நடவடிக்கைக்கு எதிராக நிற்பேன்; 'தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன்' என்றும், தமிழகத்தின் மொழி, பண்பாடு, பெருமைகளுக்கு எதிரான எந்தவொரு பாகுபாட்டையும் எதிர்த்துப் போராடுவேன்; தமிழ்நாட்டை 'தலைகுனியவிட மாட்டேன்' என்றும், பெண்கள். விவசாயிகள், மீனவர்கள். நெசவாளர்கள். தொழிலாளர்கள் என ஒவ்வொரு உழைக்கும் வர்க்கத்தின் நலன்களையும் பாதுகாக்கத் தேவையான நிதியை பெறுவதற்காக ஒன்றிய அரசிடம் போராடுவேன்: 'தமிழ்நாட்டை தலைகுளிய விடமாட்டேன்' என்றும் தமிழ்நாட்டின் உரிமை சார்ந்த பல பிரச்சினைகளை முன்னிறுத்தி தி.மு.க. வினரை 68.000 பூக்களிலும் உறுதிமொழியேற்க வைத்தார் ஸ்டாலின்.

'தலைகுனிய விடமாட்டேன்' எனும் இந்த மூவ்மெண்ட் தமிழகத்திலுள்ள அரசியல் கட்சிகளுக்கு மட்டுமல்ல; மத்தியில் ஆளும் நரேந்திரமோடியின் பா.ஜ.சு.வுக்கு கிலியை ஏற்படுத்தியது. குறிப்பாக, இந்த உறுதியேற்பு இயக்கத்தின் தாக்கம் குறித்து மத்திய அரசுக்குத் தகவல் அனுப்பிய உளவுத்துறையினர்,

'தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன் எனும் பிரச்சாரத்தை எளிதாக எடுத்துக் கொள்ளக்கூடாது. கிராம அளவில் இதன் தாக்கம் பெரிதாக இருக்கிறது. இந்த மூவ்மெண்டுக்காக கையாளப்படும் மையப்பொருள். மக்களின் ஆதரவை பெறத் தொடங்கியிருக்கிறது. தேர்தல் களத்தில் சத்தமில்லாமல் முன்னேறிக் கொண்டிருக்கிறது தி.மு.க.' என்று தெரிவித்திருக்கிறார்கள்.

மக்களிடம் ஏற்பட்டுள்ள இந்த தாக்கத்தின் வீரியம் குறைந்துவிடாமல் இருக்க, அடுத்த கட்டத்தை நோக்கி தி.முக. வினரை நகர்த்தியுள்ளார் ஸ்டாலின். அதாவது, தி.மு.க.வில் அமைப்பு ரீதியாக தற்போது 72 மாவட்டங்கள் இருக்கின்றன. அந்தந்த மாவட்ட கழகங்களில், 'தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன்' எனும் உறுதியேற்பு மற்றும் 'ஓரணியில் தமிழ்நாடு' ஆகியவைகளை தீர்மானங்களாக ஏற்கும் கூட்டங்களை செப்டம்பர் 20 மற்றும் 21 ஆகிய தேதிகளில் நடத்தி முடித்திருக்கிறார்கள்.

'தமிழகத்தை தலைகுனிய விடமாட்டேன்', 'ஓரணியில் தமிழ்நாடு' ஆகிய முன்னெடுப்புகள். மக்களின் ஆதங்கத்தைத் தணிப்பதில் முக்கிய பங்காற்றியுள்ளன. இன்னும் மிச்சசொச்ச ஆதங்கங்களும், வரும் நாட்களில் களையப்பட்டு விடும் என்கின்றனர் உடன்பிறப்புகள்.

தேர்தலுக்கு முன்பு எந்தவொரு ஆளுங்கட்சியும் மக்களை தொடர்ச்சியாக சந்தித்ததில்லை. முந்தைய தேர்தல் காலங்களில் இது தி.மு.க.வுக்கு பொருந்தக்கூடியதுதான்.

ஆனால், தற்போது ஆளும்கட்சியாக இருக்கும் தி.மு.க. மக்களை சந்திப்பதும் முன்னெடுக்கும் திட்டங்களும் ஆட்சியை மீண்டும் நிலை நிறுத்தும் அரசியலாக கணிக்கப்படுகிறது.

**-நன்றி**
**'நக்கீரன்'**
**செப். 24-26-2025.**

### கழக சட்டதிட்ட விதி:31, பிரிவு 13-ன் படி,

# தி.மு.க. பொறியாளர் அணி துணைச் செயலாளர்கள் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு

கழக சட்டதிட்ட விதி:31, பிரிவு :13–ன் படி, தி.மு.க. பொறியாளர் அணி துணைச் செயலாளர்களாக

திரு.**ஏ.ஜி.கதிரவன்** (சென்னை)

திரு. **இரா. வெங்கடேசன்** (சென்னை)

ஆகியோர் தலைமைக் கழகத்தால் நியமிக்கப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை – 18.
நாள்: 25.09.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.



கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க மதுரை வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மதுரை கிழக்கு, மேலூர், சோழவந்தான், மதுரை மேற்கு சட்டமன்ற தொகுதிகளில் 'ஓரணியில் தமிழ்நாடு' உறுப்பினர் சேர்க்கையில் சிறப்பாக செயல்பட்ட நிர்வாகிகள் உள்ளிட்ட சுமார் 1500 பேருக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி புத்தாடைகள் பரிசாக வழங்கி கௌரவித்து பாராட்டினார். உடன் கழக நிர்வாகிகள் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ., எம்.ஆர்.எம். பாலசுப்பிரமணியன், சோமசுந்தர பாண்டியன், தனச்செல்வம், ரோகிணி பொம்மதேவன், ஆனந்த், சுப.த.சம்பத், ஆர்.கணேசன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கழகத்தினர் பங்கேற்றனர்